அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஓர் ஆண்டுக்கான $700 மீட்புத்தொகை வரம்புக்கு நான் தகுதி பெறுகிறேனா (அதாவது, எனக்கு சிக்கலான நாட்பட்ட நோய் இருக்கிறது)?

நீங்கள் CDMP திட்டத்தின்கீழ் இடம்பெறும் நாட்பட்ட நோய்களில் இரண்டு அல்லது அதற்கு மேலானவற்றுக்காக, அல்லது சிக்கலான ஒரு நாட்பட்ட நோய்க்காக ஓராண்டில் மருத்துவ சிகிச்சைகள் பெற்றிருந்தால், அந்த ஆண்டுக்கு $700 உயர் மீட்புத்தொகை வரம்புக்குத் தகுதி பெறுவீர்கள்.

நீங்கள் மசேநி கழகத்தின் இணையச் சேவையைப் பயன்படுத்தியும் உங்களது வருடாந்தர மீட்புத்தொகை வரம்பைத் தெரிந்து கொள்ளலாம்.

நான் சிக்கலான நாட்பட்ட நோய்கள் உள்ள ஒரு நோயாளி. என் நிலைமை தேறும்வரை $700 வரம்பு எனக்குத் தொடர்ந்து கிடைக்குமா?

உங்களது நாட்பட்ட நோய் விவரங்களின் அடிப்படையில் மெடிசேவ்500/700 மீட்புத்தொகை வரம்பு ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்படும். நீங்கள் ஓராண்டில் சிக்கலான நாட்பட்ட நோய்களுக்கு மெடிசேவ் பயன்படுத்தினீர்களா போன்ற விவரங்கள் இதில் உள்ளடங்கும்.

2021 முதல், எனது சொந்த சிகிச்சைக்குக் குடும்பத்தினரின் மெடிசேவ் கணக்குகளிலிருந்து நான் தொடர்ந்து பணமெடுக்க முடியுமா?

உங்களது நாட்பட்ட நோய்க்கான சிகிச்சைக்குப் பணம் செலுத்த, உங்களுடைய அல்லது உங்கள் குடும்பத்தாருடைய மெடிசேவ் கணக்குகளை நீங்கள் பயன்படுத்தலாம், நடப்பிலுள்ள $500 அல்லது $700 மீட்புத்தொகை வரம்பு வரை.

நீங்கள் உங்களது சொந்த சிகிச்சைக்காக ஓராண்டில் மொத்தம் $500 அல்லது $700 தொகையை ஏற்கனவே பயன்படுத்தியிருந்தால், உங்களது அல்லது உங்கள் குடும்பத்தினரது மெடிசேவ் கணக்குகளிலிருந்து மேற்கொண்டு பணமெடுக்க முடியாது.

மெடிசேவ்500/மெடிசேவ்700 திட்டத்தை நான் எங்கே பயன்படுத்த முடியும்?

நீங்கள் பின்வரும் மருந்தகங்களில் மெடிசேவ்500/700 பயன்படுத்தலாம்:

- பொது மருத்துவமனைகள் மற்றும் தேசிய மருத்துவ நிபுணத்துவ நிலையங்களின் நிபுணத்துவ வெளிநோயாளி மருந்தகங்கள் Scheme (CHAS)
- பலதுறை மருந்தகங்கள்
- மெடிசேவ் சான்றுபெற்ற மருந்தகங்கள், சமூக சுகாதார உதவித் திட்டத்தில் (சாஸ்) பங்குபெறும் மருந்தகங்கள் உள்ளடங்கும்

MediSave

மெடிசேவ்500 திட்ட மேம்பாடுகள் உங்களுக்கு எவ்வாறு உதவும்

MINISTRY OF HEALTH
SINGAPORE

CENTRAL PROVIDENT FUND BOARD SINGAPORE

திட்டம் பற்றிய விசாரிப்புகளுக்கு, நீங்கள் திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் இடையில், சுகாதாரப் பராமரிப்பு நேரடித் தொலைபேசி சேவையை 1800 222 3399 (அல்லது +65 6222 3399) அழைக்கலாம், அல்லது QR குறியீட்டை வருடி எங்கள் இணையத்தளத்திற்குச் செல்லலாம்:

திட்ட மேம்பாடுகள்

1 ஜனவரி 2021 தேதிக்கு முன்பாக, எல்லா நோயாளிகளும் ஒவ்வொரு மெடிசேவ் கணக்கிலிருந்தும் $500 வரை பணமெடுக்க முடியும். 1 ஜனவரி 2021 முதல், பின்வரும் மேம்பாடுகள் நடப்புக்கு வரும்:

1 சிக்கலான நாட்பட்ட நோய்கள் உள்ளவர்களுக்கு உயர் மீட்புத்தொகை வரம்புகள்

சிக்கலான நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் ஆண்டுக்கு $700 வரை பணமெடுக்க முடியும். இந்த நோயாளிகள் திட்டத்தின் விரிவாக்கத்தால் (அதாவது, மெடிசேவ்700) பயனடைவார்கள். மற்ற நோயாளிகள் ஆண்டுக்குத் தொடர்ந்து $500 வரை பணமெடுக்கலாம்.

2 ஒவ்வொரு கணக்குக்கும் பதிலாக ஒவ்வொரு நோயாளிக்கும் மீட்புத்தொகை வரம்புகள் பொருந்தும்

ஒவ்வொருவரது நிலைமையின் அடிப்படையில் திட்டமிட்ட ஆதரவு வழங்கும் வகையில், ஒவ்வொரு நோயாளிக்குரிய அடிப்படையில் மீட்புத்தொகை வரம்புகள் நிர்ணயிக்கப்படும்.

1 ஜனவரி 2021-க்கு முன்



சிக்கலற்ற/
சிக்கலான
நாட்பட்ட நோய்

1 ஜனவரி 2021-க்குப் பிறகு

சிக்கலற்ற நாட்பட்ட நோய் இருக்கிறது

சிக்கலான நாட்பட்ட நோய் இருக்கிறது

மேம்பாடுகளின் விளக்கம்

வயதான இரண்டு பெற்றோர்கள் கொண்ட குடும்பத்தில் திரு ரவி மட்டும்தான் சம்பாதிக்கிறார். அவரது அப்பாவுக்கு நாட்பட்ட நோய் (சிக்கலற்றது) இருப்பதாகக் கண்டறியப்பட்டது. அவரது அம்மாவுக்குப் பற்பல நாட்பட்ட நோய்கள் உள்ளன.

1 ஜனவரி 2021-க்கு முன்



திரு ரவி தனது பெற்றோரின் நாட்பட்ட நோய் சிகிச்சைக்கான செலவை ஈடுசெய்ய, தனது மெடிசேவ் கணக்கிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் மொத்தம் $500 வரை பணமெடுக்க முடியும். இதில் $200 தொகையைத் தனது அப்பாவுக்கும் $300 தொகையைத் தனது அம்மாவுக்கும் அவர் பயன்படுத்தினார்.

1 ஜனவரி 2021 முதல்



திரு ரவி தனது அப்பாவின் நாட்பட்ட நோய் சிகிச்சைக்காகத் தனது மெடிசேவ் கணக்கிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் $500 வரை பணமெடுக்க முடியும். அதோடு, சிக்கலான நாட்பட்ட நோய் இருக்கும் தனது தாயின் சிகிச்சைக்காகத் தனது மெடிசேவ் கணக்கிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் $700 வரை அவர் பணமெடுக்க முடியும்.

மெடிசேவ்500/700 திட்டத்தின் பயன்பாடுகள்

நாட்பட்ட நோய்க்கான சிகிச்சைகள்

நாட்பட்ட நோய் நிர்வாகத் திட்டத்தின்கீழ் (CDMP) தேர்ந்தெடுக்கப்பட்ட 20 நாட்பட்ட நோய்களுக்கான சிகிச்சை உள்ளடங்கும்



தடுப்பூசிகள்

தேசிய குழந்தைப்பருவத் தடுப்பூசித் திட்டம் (NCIS) அல்லது தேசிய பெரியவருக்கான தடுப்பூசித் திட்டத்தின்கீழ் (NAIS) பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகளுக்குப் பயன்படுத்தலாம்

பரிசோதனைகள்

40 வயதுக்கு மேலான பெண்களுக்கான மெமோகிராம் பரிசோதனைகளுக்கும், அங்கீகரிக்கப்பட்ட சிசு பரிசோதனைகளுக்கும் பயன்படுத்தலாம்